KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2, No. n01 (2017) 2

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v2in01.1

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

திருவள்ளுவரின் ஒப்புரவறிதல்

Moral Responsibility in Thiruvalluvar

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head Department of Tamil Studies Bharathidasan University Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 11 January 2017
Revised: 12 January 0017
Accepted: 20 January 0017
Published: 01 February 2017

Article ID
KIJTS-2017-0033

Peer review
Double-blind peer review

Keywords
Thiruvalluvar
Thirukkural
Oppuravarithal
Social Responsibility
Benevolence
Compassion
Mutual Assistance
Social Harmony
Collective Welfare
Tamil Ethics

ABSTRACT

This article examines Thiruvalluvar's ethical vision of Oppuravarithal, a concept that emphasizes social responsibility, compassion, mutual assistance and concern for the well-being of others. Drawing upon the ethical ideas articulated in the Thirukkural, the study explores how an individual's life acquires social significance when personal welfare is connected with the welfare of the wider community. It highlights that Oppuravarithal is not merely an act of giving or material charity; rather, it represents a broader moral commitment to understanding the needs of others, extending timely support and contributing to the common good. The discussion considers the relationship between humaneness, social harmony, generosity and responsible conduct, while distinguishing meaningful assistance from actions motivated solely by personal benefit or recognition. Thiruvalluvar's teachings present benevolence as an essential virtue through which individuals can strengthen social relationships and create an equitable and compassionate society. The article also draws attention to the continuing relevance of these principles in contemporary life, where social divisions, individualism and unequal access to resources make mutual care increasingly important. By interpreting the relevant Kural-based ethical insights, the study argues that Oppuravarithal offers a practical moral framework for collective welfare and harmonious social existence. It concludes that Thiruvalluvar's thought places human concern and shared responsibility at the centre of a meaningful life, making the ideal of social benevolence relevant across generations.

How to cite this article: Dr. U. Alibava (2017). திருவள்ளுவரின் ஒப்புரவறிதல். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *2*(n01), 1. https://doi.org/10.63300/kalanjiyam.v2in01.1
Copyright and licence: © 2017 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர்,

தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

Email : alibavapkm@gmail.com

திருவள்ளுவர் படைத்த திருக்குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. அது தனிமனித ஒழுக்கத்தை மட்டும் வலியுறுத்தாமல், மனிதகுலத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் மேம்பாட்டிற்கான அறநெறிகளையும் கூறுகிறது. அறத்துப்பாலில் இடம்பெறும் இல்லறவியல் அதிகாரங்களுள் இருபத்திரண்டாவது அதிகாரமாக அமைந்துள்ள ஒப்புரவறிதல் மனிதனின் சமூகப் பொறுப்புணர்வையும், பிறருக்குப் பயன்படும் வாழ்வின் மேன்மையையும் எடுத்துரைக்கின்றது. ஒப்புரவு என்பது பிறருக்கு ஏதோ ஒன்றைக் கொடுப்பது என்ற எளிய பொருளில் மட்டும் அடங்கிவிடுவதில்லை. எல்லோரும் நன்றாக வாழத் தன்னிடம் உள்ள எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுப்பதையே திருவள்ளுவர் ஒப்புரவு என்கிறார். பிறருடைய தேவையை உணர்தல், சமூகத்தின் நலனைத் தன்னலத்திற்கு மேலாகக் கருதுதல், தன்னிடம் உள்ள வளங்களைப் பொதுநலத்திற்குப் பயன்படுத்துதல், கைம்மாறு எதிர்பாராத மனிதநேயத்தை வளர்த்தல் ஆகிய பல்வேறு அறக்கூறுகளின் ஒருங்கிணைந்த வடிவமாக ஒப்புரவு விளங்குகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் அறத்தை மையமாகக் கொண்டு மனித வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களையும் ஆராய்ந்த நூல்களுள் திருக்குறளுக்குத் தனித்துவமான இடம் உண்டு. அறம், பொருள், இன்பம் எனும் முப்பெரும் பிரிவுகளின் வழியாக மனித வாழ்வின் முழுமையைப் புலப்படுத்திய திருவள்ளுவர், அறத்துப்பாலில் தனிமனித ஒழுக்கத்திற்கும் சமூக ஒழுக்கத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினை எடுத்துரைக்கின்றார்.

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்வது மட்டுமே அறவாழ்வாகிவிடாது. அவன் வாழும் சமூகமும் வளம்பெற வேண்டும். அவனைச் சுற்றியுள்ள மக்களின் துன்பங்களைக் கண்டு அவனது உள்ளம் வெதும்ப வேண்டும். பிறருடைய பசியையும் வறுமையையும் தன்னுடைய பசியாக, தன்னுடைய வறுமையாகக் கருத் வேண்டும். இத்தகைய சிந்தனையின் இலக்கிய வடிவமே ஒப்புரவறிதல் அதிகாரமாகும்.

ஒப்புரவு எனும் சொல் ‘ஒப்பு + உறவு’ என்ற இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். உலகத்தோடு ஒத்திசைந்து வாழ்தல், சமூகத்தின் தேவைகளை உணர்ந்து செயல்படுதல், பிறருடைய நலனில் தன்னுடைய நலனையும் காணுதல் ஆகிய பொருண்மைகளை இச்சொல் உள்ளடக்கியுள்ளது. பரிமேலழகர் இவ்வதிகாரத்தின் பெயருக்கான விளக்கத்தில், “அஃதாவது, உலகநடையினை அறிந்து செய்தல். உலக நடை வேத நடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந் தன்மைத்தாகலின், ஒப்புரவறித லென்றார்” (திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 76) என்று குறிப்பிடுகின்றார். இவ்வுரை ஒப்புரவு என்பதன் அடிப்படைப் பொருளைத் தெளிவுபடுத்துகின்றது. இக்காலப் பொருளில் விளக்கம் கொடுக்க வேண்டுமேயானால் ‘தகுந்தவர்க்கு உதவுதல்’ எனக் குறிப்பிடலாம். தகுந்தவர்க்கு உதவுதல் - தேவையுடையோர்க்கு உதவுதல் என்பது தலையாய அறமாகும். அத்தகைய அறம் என்பது நூல்களில் கூறப்பட்ட விதிகளை மட்டும் பின்பற்றுவது

அன்று; உலகியல் தேவைகளை உணர்ந்து, அவற்றிற்கு ஏற்றவாறு பிறருக்கு உதவுவதும் அவ் அறத்தின்பாற் பட்டதாகும்.

பொருளைச் சம்பாதிப்பது எதற்கு?

ஒருவன் தன்னுடைய முயற்சியாலும் உழைப்பாலும் ஈட்டிய செல்வம் அவனுடைய தனிப்பட்ட நுகர்விற்காக மட்டுமே பயன்பட வேண்டியதன்று. உழைக்க முடியாமல் இருக்கும் தகுதியுடையவர்களுக்கு உதவி செய்வதற்கும் அச்செல்வம் பயன்பட வேண்டும் என்பதை வள்ளுவர்,

தாள்ஆற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள். 212)

என்று குறிப்பிடுகின்றார். இக்குறளில் 'தாளாற்றி' என்ற சொல் உழைப்பின் இன்றியமையாமையை உணர்த்துகின்றது. உழைத்துப் பொருள் ஈட்டுவதற்கு வள்ளுவர் எதிரானவர் அல்லர். மாறாக, உழைப்பின் பயன் சமூக நலனையும் சென்றடைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். 'வேளாண்மை' என்ற சொல்லின் பயன்பாடு இக்குறளில் தனித்துவமானது. வேளாண்மை என்பது நிலத்தைப் பண்படுத்தி விளைச்சலை உருவாக்குவது போன்றே, ஒப்புரவு என்பது சமூகத்தில் நன்மையை விளைவிக்கும் செயற்பாடாகப் பொருள் விரிவடைகின்றது. பரிமேலழகர் உரையில், தக்கவர்களுக்கு உதவுவதற்காகவே முயன்று ஈட்டிய பொருள் பயன்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இதன் வழியாகத் திருவள்ளுவர் பொருள் ஈட்டுவதன் இன்றியமையாமையினை எடுத்துரைக்கின்றார். செல்வத்தின் பெருமை அதன் அளவில் இல்லை; அது எத்தனை உயிர்களுக்குப் பயன்படுகின்றது என்பதிலேயே உள்ளது எனவும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். தேடிய பொருட் செல்வம் பிறருக்கு உதவி செய்வதற்கே பயன்பட வேண்டும் என்றும், பொருளினை முயற்சி செய்து ஈட்ட வேண்டும் என்றும், அவ்வாறு ஈட்டிய பொருளைத் தக்கார்க்குத் தந்து உதவ வேண்டும் என்றும் இக்குறளில் வள்ளுவர் அற்புதமான வாழ்வியல் வழியினைக் காட்டுகிறார். இதனையே புறநானூறு 'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே' (புறம். 189) எனப் பாடுகிறது.

பிறருக்கு உதவ வேண்டியதன் தேவை யாது?

உதவி செய்து வாழ்தலைப் போன்ற வேறு நல்ல செயலைத் தேவருலகத்திலும் காண முடியாது என்கிறார் வள்ளுவர்.

புத்தேள் உலகத்தும், ஈண்டும் பெறல் அரிதே

ஒப்புரவின் நல்ல பிற (குறள். 213)

என்பது அவர் வாக்கு. தேவர் உலகத்திலும் மண்ணுலகத்திலும் ஒப்புரவைவிடச் சிறந்த நற்பண்பினைப் பெறுதல் அரிது என்பது இக்குறளின் பொருளாகும். இக்குறளில் வள்ளுவர் ஒப்புரவின் மேன்மையை மிகைப்படுத்திக் கூறவில்லை; அதன் உண்மையான அறவியல் மதிப்பினை நிறுவுகின்றார். பிறருக்கு உதவும் பண்பு

என்பது தனிமனிதனின் உயர்வோடு முடிவடைவதில்லை. அது சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வையும் மேம்படுத்துகின்றது. 'புத்தேளுலகம்' என்ற சொல்லின் வழியாக உயர்ந்த உலகத்தையே எடுத்துக்காட்டாகக் கொண்டு ஒப்புரவின் அருமை இக்குறளில் வள்ளுவரால் விளக்கப்படுகின்றது.

மனிதன் தன்னுடைய அறிவு, செல்வம், ஆற்றல் ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு சாதனைகளை நிகழ்த்தலாம். ஆனால் அவை பிறருடைய வாழ்வில் நன்மையை உருவாக்காவிட்டால் அவற்றின் அறவியல் மதிப்பு முழுமையடையாது. தேவருலகத்தையும் இப்பூவுலத்தையும் ஒப்பிட்டுக்காட்டி மனிதப் பண்புகளில் ஒப்புரவு உயர்ந்த இடத்தைப் பெறுகின்றது என்பதனை இக்குறள் நிலைநாட்டுகின்றது.

திரும்ப எதிர்பார்த்துச் செய்வதல்ல உதவி

‘பிறருக்கு உதவுவது, அவ்வுதவியைப் பெற்றவர் திரும்பச் செய்வதை எதிர்பார்த்துச் செய்வதற்கு அன்று; ஒருவர் செய்த உதவிக்குப் பதிலாகத் திரும்பச் செய்துதான் ஆகவேண்டும் என்றால், மழை தரும் மேகங்களுக்கு இந்த உலகம் திரும்ப என்ன செய்து ஈடுகட்டிவிட முடியும்?’ என்று வள்ளுவர் வினாத் தொடுக்கிறார்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு, மாரிமாட்டு

என்ஆற்றும் கொல்லோ உலகு? (குறள். 211)

என்பது வள்ளுவரின் அவ்வினா. ‘கைம்மாறு எதிர்பாராத ஒப்புரவு’ வேண்டும் என்கிறார் வள்ளுவர். மழையானது உலக உயிர்களுக்குத் தேவையான நீரை வழங்குகின்றது. ஆனால் அதற்குப் பதிலாக உலகம் மழைக்குக் கைம்மாறு எதையும் செய்ய இயலாது. மழையின் கொடைத் தன்மையைப் போன்றதே ஒப்புரவாளனின் உதவும் இயல்பாகும் என்பது இக்குறளின் அடிப்படைக் கருத்தாகும். இக்குறளில் திருவள்ளுவர் மழையை ஒப்புரவின் குறியீடாகப் பயன்படுத்துகின்றார். மழை பெய்வதற்கு முன்னர் நிலத்தின் தகுதியையோ, உயிர்களின் நன்றியுணர்வையோ ஆராய்வதில்லை. அதுபோல உண்மையான ஒப்புரவாளன் பிறருக்கு உதவும்போது அவர்களிடமிருந்து பதிலுதவியை எதிர்பார்ப்பதில்லை.

'கைம்மாறு வேண்டா' என்ற தொடரில் இடம்பெறும் எதிர்மறைச் சொற்பயன்பாடு ஒப்புரவின் தூய்மையை வலியுறுத்துகின்றது. உதவியின் மதிப்பு அதற்குக் கிடைக்கும் பிரதிபலனில் இல்லை; அது பிறருக்கு ஏற்படுத்தும் நன்மையிலேயே உள்ளது. இன்றைய சமூகத்தில் உதவிகள்கூட விளம்பரம், புகழ், அரசியல் ஆதாயம், பொருளாதாரப் பலன் ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்கின்ற சூழலில் இக்குறள் மிகுந்த பொருத்தப்பாட்டைப் பெறுகின்றது. உலக உயிர்கள் நிலைபெற்று வாழ்வதற்கு அடிப்படையாத் திகழும் நீரினை வழங்கும் மேகங்கள் உயிர்களிடத்தில் கைம்மாறு என்பதனை எதிர்பார்ப்பதில்லை. அதைப் போல மேகங்கள் போன்றவர்கள் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்கிச் செய்யப்படுவன அல்ல. தவிர்க்காமல் நன்மை செய்வதை உறுதியாகக் கொண்டுள்ள படியால் வள்ளுவர்

‘கைம்மாறு கருதாக் கடப்பாடு’ என்று கூறியுள்ளார். கைம்மாறு கருதாத உதவியே உண்மையான மனிதநேயத்தின் அடிப்படை என்பதையும் இக்குறளின் மூலம் வள்ளுவர் நிறுவுகின்றார்.

இக்குறளில் திருவள்ளுவர் மழையை ஒப்புரவின் குறியீடாகப் பயன்படுத்துகின்றார். மழை பெய்வதற்கு முன்னர் நிலத்தின் தகுதியையோ, உயிர்களின் நன்றியுணர்வையோ ஆராய்வதில்லை. அதுபோல உண்மையான ஒப்புரவாளன் பிறருக்கு உதவும்போது அவர்களிடமிருந்து பதிலுதவியை எதிர்பார்ப்பதில்லை.

‘கைம்மாறு வேண்டா’ என்ற தொடரில் இடம்பெறும் எதிர்மறைச் சொற்பயன்பாடு ஒப்புரவின் தூய்மையை வலியுறுத்துகின்றது. உதவியின் மதிப்பு அதற்குக் கிடைக்கும் பிரதிபலனில் இல்லை; அது பிறருக்கு ஏற்படுத்தும் நன்மையிலேயே உள்ளது.

இன்றைய சமூகத்தில் உதவிகள்கூட விளம்பரம், புகழ், அரசியல் ஆதாயம், பொருளாதாரப் பலன் ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்கின்ற சூழலில் இக்குறள் மிகுந்த பொருத்தப்பாட்டைப் பெறுகின்றது. கைம்மாறு கருதாத உதவியே உண்மையான மனிதநேயத்தின் அடிப்படை என்பதையும் வள்ளுவர் இக்குறளின் மூலம் எடுத்துரைக்கிறார்.

பேரறிவாளன் செல்வம்

‘உலகின் வளர்ச்சிப் போக்கை அறிந்து செயல்படும் பேரறிவாளனின் செல்வம், நீர் நிறைந்த ஊருணி எல்லோர்க்கும் பொதுவாவது போல் பொதுவாகும்’ என்கிறார் வள்ளுவர். ஊருணியில் நீர் நிறைந்திருப்பது ஊர் முழுவதற்கும் பயன்படுகின்றது. அதுபோல உலகத்தோடு பொருந்தி வாழும் பேரறிவாளனின் செல்வமும் பலருக்குப் பயன்படுகின்றது.

ஊருணி நீர்நிறைந் தற்றே, உலகுஅவாம்

பேர்அறி வாளன் தெரு (குறள். 215)

இக்குறளில் வள்ளுவர் பயன்படுத்தும் ‘ஊருணி’ உவமை சமூகப் பயன்பாட்டின் மிகச்சிறந்த இலக்கிய வெளிப்பாடாகும். ஊருணியின் நீர் ஒரு தனிமனிதனுக்குச் சொந்தமானதன்று. அது ஊரின் பொதுவான தேவையை நிறைவேற்றுகின்றது. தாகம் கொண்டவர்களுக்கும், வேளாண்மைக்கும், கால்நடைகளுக்கும், பிற உயிர்களுக்கும் அது பயன்படுகின்றது. அதேபோன்று ஒப்புரவாளனின் செல்வமும் சமூகத்தின் பல்வேறு தேவைகளுக்கு உதவ வேண்டும். இங்கு ‘திரு’ என்பது செல்வத்தைக் குறிக்கின்றது. ஆனால் அந்தச் செல்வம் தனியுடைமையாக முடங்கிக் கிடக்காமல் சமூகத்திற்கு நன்மையை உருவாக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்தாகும். இக்குறளின் வழியாகப் பொதுவுடைமைச் சிந்தனையின் அடிப்படைக் கூறான பகிர்வு உணர்வையும் சமூகப் பொறுப்பையும் நாம் உணர முடிகின்றது. இதனை நவீனப் பொருளாதாரக் கோட்பாடுகளுடன் முற்றிலும் ஒன்றாக்கிவிட முடியாவிட்டாலும், செல்வத்தின் சமூகப் பயன்பாட்டை வள்ளுவர் முன்னிறுத்துவது தெளிவாகின்றது. தனிமனிதனின் செல்வம் சமூகத்தின் நலனோடு இணைந்திருக்கும் போதுதான்

அதன் பயன் முழுமையடைகின்றது என்னும் கருத்துடையவராக வள்ளுவர் திகழ்கிறார் என்பதும் புலப்படுகிறது.

பிறரால் விரும்பப்படுபவனின் செல்வம்

'பிறரால் விரும்பப்படுபவனிடம் சென்று சேரும் செல்வம் உண்ணத்தகும் கனிதரும் மரம் ஊருக்கு உள்ளே பழுததிருப்பதைப் போல எல்லார்க்கும் பொதுவாகும்' என்பதை வள்ளுவர்,

பயன்மரம் உளஊர்ப் பழுத்துஅற்றால், செல்வம்

நயன்உடை யான்கண் படின் (குறள். 216)

எனும் குறளில் எடுத்து மொழிகிறார்.

பயன்மர உருவகமும் செல்வத்தின் பயனும்

பயன்தரும் மரம் ஊரின் நடுவில் பழுத்து நின்றால் அது ஊரில் பலருக்கும் பயன் தரும். அதுபோல நற்பண்புடைய ஒருவனிடம் செல்வம் சேரும்போது அது பலருக்கும் நன்மையை அளிக்கும். இக்குறளில் பயன்மரம் என்ற இயற்கை உருவகத்தின் வழியாகச் செல்வத்தின் சமூகப் பயன் விளக்கப்படுகின்றது. ஒரு மரம் தன்னுடைய கனியைத் தானே உண்ணுவதில்லை. பிற உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் அது உணவாகத் தருகின்றது. அதன் நிழல் வழிப்போக்கர்களுக்கு இளைப்பாறுதலைத் தருகின்றது. அதன் இருப்பே பிற உயிர்களின் வாழ்விற்கு ஆதரவாக அமைகின்றது. இதனை ஒப்புரவாளனின் செல்வத்தோடு வள்ளுவர் ஒப்பிடுகின்றார். 'நயனுடையான்' என்ற சொல்லில் நற்பண்பு, நீதியுணர்வு, பிறர்நலம் பேணும் இயல்பு ஆகியவை உள்ளடங்கியுள்ளன. செல்வம் ஒருவனிடம் இருப்பதால் அவன் உயர்ந்தவனாகிவிடுவதில்லை. அச்செல்வத்தைப் பிறருக்குப் பயன்படும் வகையில் பயன்படுத்தும் மனப்பான்மை அவனிடம் இருக்க வேண்டும். பயனற்ற செல்வம் மரத்தில் கனியாத தன்மையை ஒத்தது; பிறருக்கு உதவும் செல்வமே பயன்மரத்தின் கனியைப் போன்றது என்பதனை வள்ளுவர் இக்குறளில் நயமாகப் பதிவு செய்கிறார்.

பெரும் பண்பாளனிடம் சேரும் செல்வம்

பெரும் பண்பாளனிடம் சேரும் செல்வம், எல்லா உறுப்புகளாலும் மருந்து ஆகிப் பயன்படும் மரம் போலப் பொதுவாகும்' என்கிறார் வள்ளுவர்.

மருந்துஆகித் தப்பா மரத்துஅற்றால், செல்வம்

பெருந்தகை யான்கண் படின் (குறள். 217)

எனும் இக்குறளில் மருந்தாகப் பயன்படும் மரம் தன்னுடைய ஒவ்வொரு பகுதியாலும் உயிர்களுக்கு நன்மை தருவது போல, பெருந்தன்மை உடையவனிடம் இருக்கும் செல்வமும் பல்வேறு வகையில் பிறருக்குப் பயன்படுகின்றது என்கிறார்.

மருந்து மரமும் பெருந்தன்மையும்

இக்குறளில் வள்ளுவர் மரத்தின் மருத்துவப் பயனை உருவகமாகக் கொள்கின்றார். மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய், கனி போன்ற பல்வேறு பகுதிகளும் மருத்துவப் பயன்பாட்டைக் கொண்டிருக்கலாம். அவ்வாறே பெருந்தன்மை உடையவனின் செல்வமும் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். இக்குறள்,

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்துஅற்றால், செல்வம்

நயன்உடை யான்கண் படின் (குறள். 216)

எனும் குறளின் கருத்தை மேலும் விரிவுபடுத்துகின்றது. இக்குறளில் பயன்மரம் வழியாகப் பொதுப்பயன் விளக்கப்பட்டது. அடுத்த குறளில் மருந்து மரத்தின் வழியாகப் பல்துறைப் பயன்பாடு உணர்த்தப்படுகின்றது.

இங்கு வள்ளுவர் செல்வத்தைவிடச் செல்வத்தை உடைய மனிதனின் பண்பிற்கே முதன்மை அளிக்கின்றார். செல்வம் ஒரு கருவி; பெருந்தன்மை என்பது அதன் பயனைத் தீர்மானிக்கும் அறப்பண்பு. மனிதனுடைய பெருமை அவனிடம் உள்ள செல்வத்தால் அளவிடப்படுவதில்லை; அவன் பிறருக்குச் செய்யும் நன்மையால் அளவிடப்படுகின்றது என்பதை வள்ளுவப் பெருந்தகை இக்குறளில் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

பொருள் இல்லாதபோது எவ்வாறு கொடுப்பது?

பிறருக்கு உதவி வாழ்வதையே தம்முடைய கடமையாகக் கொண்ட அறிவாளிகள், தம்மிடம் கொடுக்கச் செல்வம் இல்லாத காலத்திலும் உழைக்கும் சக்தியற்றவர்களுக்கு உதவத் தயங்க மாட்டார்கள் என்பதை வள்ளுவர்,

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்

கடன்அறி காட்சி யவர் (குறள். 218)

எனும் குறளில் எடுத்துரைக்கிறார். தமக்கு ஏற்ற வசதியும் வாய்ப்பும் இல்லாத காலத்திலும் ஒப்புரவு செய்வதில் தளராதவர்களே தங்களுடைய கடமையை உணர்ந்த அறிவுடையவர்கள் என்பது இக்குறளின் கருத்தாகும்.

இக்குறளில் வள்ளுவர் ஒப்புரவினைச் செல்வந்தர்களுக்குரிய பண்பாக மட்டும் கருதவில்லை. பொருளாதாரச் சூழல் சாதகமாக இல்லாத காலத்திலும் பிறருக்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மையை வலியுறுத்துகின்றார். 'கடனறி காட்சியவர்' என்ற தொடர் குறிப்பிடத்தக்கது. ஒப்புரவு என்பது விருப்பத்தின் அடிப்படையில் நிகழும் செயல் மட்டுமன்று; அது சமூகத்தில் வாழும் மனிதனின் அறக்கடமையாகவும் அமைகின்றது. எனினும், இக்குறளைப் பொருளாதாரத் தகுதியை மீறி ஒருவர் தம்மையே அழித்துக்கொள்ள வேண்டும் என்ற பொருளில் எடுத்துக்கொள்ளக் கூடாது. தம்மால் இயன்ற அளவில் பிறருக்குப் பயன்பட வேண்டும் என்ற அறவுணர்வே இதன் அடிப்படை. ஒப்புரவு என்பது செல்வத்தின் மிகுதியால் மட்டும் உருவாவதன்று; அது

மனத்தின் உயர்வால் உருவாகின்றது என்பதையெல்லாம் வள்ளுவப் பெருந்தகை சுட்டிக்காட்டுகிறார்.

உதவாமல் இருப்பதே உண்மையான வறுமை

பிறருக்கு உதவி செய்யும் நற்குணம் நிறைந்தவன் தான் கடமையாகக் கருதியுள்ள உதவி செய்தலைச் செய்ய முடியாத நிலையில் வருந்தும்போது அவன் வறியவன் ஆகிறான். இதனை வள்ளுவர்,

நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர

செய்யாது அமைகலா வாறு (குறள். 219)

எனும் குறளில் குறிப்பிடுகிறார். நற்பண்பு உடையவன் வறுமையுற்றவனாகக் கருதப்படுவது, அவன் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய முடியாமல் வருந்தும் நிலையினாலேயாகும். இக்குறள் வறுமை பற்றிய வழக்கமான பொருளாதாரப் புரிதலுக்கு மாற்றான ஓர் அறவியல் சிந்தனையைக் காட்டுகிறது. பொருளின்மை மட்டுமே வறுமையன்று. பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தும், அதனை நிறைவேற்ற இயலாத நிலையும் ஒப்புரவாளனுக்கு ஒரு குறையாகவும் வருத்தமாகவும் அமைகின்றது. இங்கு 'நயனுடையான்' என்பது அன்பு, அருள், ஒப்புரவு போன்ற பண்புகளைக் கொண்ட மனிதனைக் குறிக்கின்றது.

பிறருடைய துன்பத்தைக் கண்டும் காணாமல் இருப்பவன் பொருள் வளம் பெற்றிருந்தாலும் அறவியல் அடிப்படையில் வறுமையுடையவனாகவே கருதப்படுவான். இதற்கு மாறாக, பிறருக்கு உதவ வேண்டும் என்ற உயர்ந்த மனப்பான்மை கொண்டவன் பொருள் இல்லாத நிலையிலும் பண்பால் உயர்ந்தவனாகத் திகழ்கின்றான். பொருளாதார வறுமையைவிட மனிதநேய வறுமையே சமூகத்திற்கு மிகப்பெரிய இழப்பாகும் என்பதை இதன் மூலம் வள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

பிறருக்குக் கொடுத்தால் நமக்கு வறுமை வாராதா?

பிறருக்கு உதவி செய்வதால் ஒருவனுக்குக் கேடு வரும் என்றால், அந்தக் கேட்டை அவன் தன்னை விற்றாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். இதனை,

ஒப்புரவி னால்வரும் கேடுஎனின், அஃதுஒருவன்

விற்றுக்கோள் தக்கது உடைத்து (குறள். 220)

எனும் குறளில் அவர் எடுத்துரைக்கிறார்; வறுமையிலும் தளராத ஒப்புரவு வேண்டும் என்கிறார் வள்ளுவர். ஒப்புரவு செய்வதால் ஒருவனுக்குப் பொருளாதார இழப்பு ஏற்படுமானால், அந்த இழப்பைக்கூடத் தன்னையே விற்றுப் பெற்றுக்கொள்ளத் தகுந்ததாகக் கருத வேண்டும் என்பது இக்குறளின் ஆழமான கருத்தாகும்.

பிறர்க்கு உதவுதலின் உச்சநிலை - தியாகம்

ஒப்புரவறிதல் குறித்த இக்குறள் பிறருக்கு உதவுதலின் உச்சநிலையைக் காட்டுகிறது. கைம்மாறு கருதாத உதவியை வலியுறுத்திய வள்ளுவர், இக் குறளில் ஒப்புரவுக்காகத் தியாகம் செய்யும் மனநிலையை எடுத்துரைக்கின்றார். 'விற்றுக்கோள்' என்ற சொல்லின் வழியாகத் தன்னல மறுப்பின் உச்சநிலையை வள்ளுவர் புலப்படுத்துகின்றார். இங்கு பொருளாதார இழப்பு என்பது ஒப்புரவிலிருந்து விலகுவதற்கான காரணமாக அமையக் கூடாது என்ற அறக்கருத்து வலியுறுத்தப்படுகின்றது. மனித உயிருக்கும் சமூக நலனுக்கும் இடையிலான உறவை உயர்ந்த அறநிலைக்கு எடுத்துச் செல்கின்றார். ஒப்புரவு என்பது உபரி வளத்தைப் பகிர்வது மட்டுமன்று; தேவைப்படும் நேரத்தில் தன்னலத்தைத் துறந்து பிறருக்காக உதவுவது என்கிறார் வள்ளுவர்.

பிறருக்கு உதவுபவனே உயிர் வாழ்பவன்

உலக நடப்புக்கு ஒத்தது எது என்பதை உணர்ந்து உழைக்கும் சக்தி அற்றவர்க்கு உதவுபவனே உயிரோடு வாழ்பவன். அவ்வாறு உதவி வாழாதவன் உயிரோடு இருந்தாலும் இறந்தவனாகவே கருதப்படுவான் என்பதை,

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்

செத்தாருள் வைக்கப் படும் (குறள். 214)

என்கிறார். உலகத்தோடு ஒத்திசைந்து வாழும் முறையினை அறிந்து செயல்படுபவனே உண்மையில் உயிர்வாழ்பவன். பிறருடைய தேவைகளை அறிந்து உதவாதவன் உயிருடன் இருந்தாலும் இறந்தவர்களுக்கு ஒப்பானவன் என்பது இக்குறளின் பொருளாகும். இக்குறளில் வள்ளுவர் உயிர்வாழ்தல் என்பதற்குப் புதியதோர் விளக்கத்தை வழங்குகின்றார். உடலின் இயக்கம் மட்டுமே உயிர்வாழ்தலின் அடையாளமன்று. பிறருக்குப் பயன்படும் செயல்பாடுகளே மனித வாழ்வின் உண்மையான அடையாளங்களாகும் என்கிறார். 'உயிர்வாழ்வான்', 'செத்தாருள்' என்ற எதிர்நிலைச் சொற்பயன்பாடு கருத்தின் வலிமையை அதிகரிக்கின்றது. இங்கு வள்ளுவர் உயிரியல் சார்ந்த வாழ்வையும் அறவியல் சார்ந்த வாழ்வையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார். பிறருக்காக வாழாத வாழ்க்கை, உயிரின் நோக்கத்தை இழந்த வாழ்க்கையாகின்றது. மனிதன் தன்னுடைய இருப்பால் பிறருக்கு நன்மை விளைவிக்கும்போதுதான் அவனது வாழ்வு பொருளுடையதாகின்றது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஒப்புரவறிதலும் ஈகையும்

திருக்குறளில் ஒப்புரவறிதல் (அதிகாரம் 22), ஈகை (அதிகாரம் 23) ஆகிய இரு அதிகாரங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. எனினும், இவ்விரண்டிற்கும் இடையே கருத்தியல் அடிப்படையில் வேறுபாடு காணப்படுகின்றது. ஈகை என்பது ஒப்புரவின் ஒரு வெளிப்பாடாக அமைகின்றது. ஒப்புரவு அதைவிட விரிவானது. ஏனெனில், பொருள் கொடுப்பது மட்டுமல்லாமல், அறிவு, உழைப்பு, திறமை, நேரம், ஆற்றல் ஆகியவற்றைப் பிறருடைய நலனுக்காகப்

பயன்படுத்துவதும் ஒப்புரவின் எல்லைக்குள் அடங்குகின்றது. எனவே, ஒப்புரவு என்பது ஈகையை உள்ளடக்கிய விரிந்த சமூக அறக்கோட்பாடாகக் கருதப்படலாம்.

ஒப்புரவறிதலில் வெளிப்படும் இலக்கிய உத்திகள்

திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் கருத்தை நேரடியாகக் கூறுவதோடு நிறுத்திவிடாமல், இயற்கை சார்ந்த உவமைகளின் வழியாகவும் தனது அறவியல் சிந்தனையை வெளிப்படுத்துகின்றார்.

இவ்வாறு இயற்கை, பொருளாதாரம், சமூக உறவு, மனிதப் பண்பு ஆகிய பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே இணைத்துக் கொண்டு ஒப்புரவின் உயர்வை வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். நீர்நிலை, பயன்மரம், மருந்து மரம் ஆகிய இயற்கை சார்ந்த எடுத்துக்காட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் வழியாக மனிதனின் செல்வம் சமூகத்திற்கு எவ்வாறு பயன்பட வேண்டும் என்பதைப் படிப்படியாக விளக்குகின்றார்.

ஒப்புரவறிதலின் சமகாலச் சமூகப் பொருத்தப்பாடு

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்திற்கும் இன்றைய உலகிற்கும் இடையே காலவேறுபாடு மிகுதியாக இருந்தாலும், மனிதனின் அடிப்படைத் தேவைகளும் சமூகத்தின் அடிப்படைச் சிக்கல்களும் இன்றளவும் தொடர்கின்றன. இன்றைய உலகில் அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம் ஆகிய துறைகள் வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் அதே நேரத்தில் வறுமை, பசி, கல்வியின்மை, வேலைவாய்ப்பின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, இயற்கை வளங்களின் சமமற்ற பகிர்வு போன்ற சிக்கல்களும் நிலவுகின்றன. இச்சூழலில் ஒப்புரவறிதல் அதிகாரம் பல்வேறு சமூகப் பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.

கல்வித்துறையில் ஒப்புரவு

கல்வி என்பது தனிமனித முன்னேற்றத்திற்கான கருவி மட்டுமன்று; சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படையாகும். பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்குக் கல்வி உதவி வழங்குதல், நூலகங்களை உருவாக்குதல், கல்வி வாய்ப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற செயல்பாடுகள் ஒப்புரவின் நவீன வடிவங்களாகும்.

பொருளாதாரத் துறையில் ஒப்புரவு

செல்வம் ஒரு சிலரிடம் மட்டும் குவியாமல் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கும் நன்மையளிக்க வேண்டும் என்ற கருத்து இதில் வள்ளுவரால் உணர்த்தப்படுகின்றது. சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய தொழில்முனைவோர் செயல்பாடு, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், நலிவடைந்த மக்களுக்கான பொருளாதார ஆதரவு போன்றவை இக்கருத்துடன் தொடர்புடையவை.

மருத்துவத் துறையில் ஒப்புரவு

மருந்து மர உருவகம் மருத்துவத் துறையில் மனிதநேயத்தின் தேவையை நினைவூட்டுகின்றது. பொருளாதார வசதியற்றவர்களுக்கும் தரமான மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற சிந்தனை ஒப்புரவின் சமூகப் பயன்பாடாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒப்புரவு

மழை, மரம், ஊருணி ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கொண்ட வள்ளுவரின் சிந்தனை இயற்கையுடனான மனிதனின் உறவை நினைவூட்டுகின்றது. நீர்நிலைகளைப் பாதுகாத்தல், மரங்களை வளர்த்தல், இயற்கை வளங்களை அடுத்த தலைமுறையினருக்காகப் பாதுகாத்தல் போன்றவை விரிவான பொருளில் சமூக ஒப்புரவின் கூறுகளாகக் கொள்ளத்தக்கவை.

அரசியல் மற்றும் நிர்வாகத்தில் ஒப்புரவு

அரசின் கடமை மக்களின் நலனைப் பாதுகாப்பதாகும். மக்கள் நலத் திட்டங்கள், சமவாய்ப்பு, சமூகநீதி, அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அனைவருக்கும் வழங்குதல் ஒப்புரவின் நிறுவனமயமான வெளிப்பாடுகளாக அமைகின்றன. எனவே, ஒப்புரவறிதல் என்பது தனிமனித அறமாக மட்டுமன்றி, சமூக நிறுவனங்களும் அரசும் பின்பற்ற வேண்டிய பொதுநலக் கோட்பாடாகவும் விரிவடைகின்றது.

ஒப்புரவறிதல் அதிகாரத்தின் தனித்துவமான அறவியல் பங்களிப்பு

இவ்வதிகாரத்தை முழுமையாக ஆராயும்போது சில அடிப்படையான உண்மைகள் புலப்படுகின்றன. முதலாவது, மனிதனுடைய செல்வம் அவனுடைய தனிப்பட்ட உடைமை என்ற நிலையைக் கடந்து சமூகப் பயன்பாட்டிற்குரிய அறப்பொறுப்பையும் கொண்டிருக்கின்றது. இரண்டாவது, உதவி என்பது பொருளாதார வளமுடையவர்களின் தனிப்பட்ட விருப்பச் செயலன்று; மனிதநேய உணர்வுடைய அனைவரின் கடமையாகும். மூன்றாவது, பிறருக்குப் பயன்படாத வாழ்க்கை அதன் அடிப்படை நோக்கத்தை இழந்துவிடுகின்றது. நான்காவது, பிறருடைய துன்பத்தை உணர்ந்து செயல்படுவதில்தான் மனிதனின் அறிவும் பண்பும் முழுமை பெறுகின்றன. ஐந்தாவது, ஒப்புரவு என்பது தனிமனித நற்பண்பாகத் தொடங்கி, சமூக ஒற்றுமையாக வளர்ந்து, உலகளாவிய மனிதநேயமாக விரிவடைகின்றது. இதன் மூலம் வள்ளுவர் முன்வைக்கும் ஒப்புரவுக் கோட்பாடு வெறும் கொடைத்தன்மையை மட்டும் சார்ந்ததன்று; அது மனிதனின் சமூக இருப்பிற்கான அறவியல் அடித்தளமாக விளங்குகின்றது.

திருவள்ளுவரின் ஒப்புரவறிதல் அதிகாரம் மனித வாழ்க்கையின் மிக முக்கியமான அறக்கூறான சமூகப் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வதிகாரத்தில் இடம்பெறும் பத்துக் குறட்பாக்களும் தனித்தனியான கருத்துகளை எடுத்துரைப்பதோடு, அவை அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே மையக் கருத்தினை நிலைநாட்டுகின்றன. அதுவே பிறருக்குப் பயன்படும் வாழ்க்கை. வள்ளுவர் ஒப்புரவின் சிறப்பை மழையின் கைம்மாறு கருதாத இயல்பிலிருந்து தொடங்குகின்றார். உழைத்துப் பெற்ற செல்வத்தின் உண்மையான பயனை

விளக்குகின்றார். பின்னர் ஒப்புரவாளனின் வாழ்வை ஊருணி, பயன்மரம், மருந்து மரம் ஆகிய இயற்கை உருவகங்களின் வழியாகப் புலப்படுத்துகின்றார். வறுமையிலும் உதவும் மனப்பான்மை தளரக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றார். இறுதியில் ஒப்புரவுக்காகத் தன்னலத்தைத் துறக்கும் உயர்ந்த மனநிலையை எடுத்துரைக்கின்றார்.

இவ்வதிகாரத்தின் கருத்து வளர்ச்சியை ஆராயும்போது, வள்ளுவர் தனிமனிதனின் செல்வத்தையும் சமூகத்தின் நலனையும் ஒன்றிணைத்துப் பார்க்கின்றார் என்பது தெளிவாகின்றது. செல்வம் என்பது குவித்து வைப்பதற்கான பொருளாதாரச் சாதனம் மட்டுமன்று; பிறருடைய வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்கான அறக்கருவியுமாகும். ஒரு மனிதன் எவ்வளவு பொருள் ஈட்டினான் என்பது அவனுடைய பொருளாதாரச் சாதனையை உணர்த்தலாம். ஆனால் அவன் எத்தனை மனிதர்களின் துயரைத் துடைத்தான் என்பதே அவனுடைய அறவியல் உயர்வை உணர்த்தும். இந்த அடிப்படை உண்மையையே ஒப்புரவறிதலில் வள்ளுவர் உணர்த்துகிறார். திருவள்ளுவரின் பார்வையில் மனிதன் தனக்காக மட்டும் வாழ்பவன் அல்லன்; பிறருக்காகவும் வாழ வேண்டியவன். அவனுடைய வாழ்வின் நிறைவு தனிப்பட்ட இன்பத்தில் இல்லை; சமூகத்தின் நலனில் அடங்கியுள்ளது. எனவே, ஒப்புரவறிதல் அதிகாரத்தை வெறுமனே பிறருக்கு உதவுதல் பற்றிய பத்துக் குறட்பாக்களின் தொகுப்பாகக் கருதிவிட முடியாது. அது மனிதநேயத்தின் தத்துவம், சமூகப் பொறுப்பின் இலக்கணம், செல்வத்தின் அறப் பயன்பாடு, உலகளாவிய சகோதரத்துவத்தின் அடிப்படை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய உயரிய வாழ்வியல் கோட்பாடாகும். பிறருக்குப் பயன்படாத செல்வம் முழுமையான செல்வமன்று; பிறருக்குப் பயன்படாத அறிவு முழுமையான அறிவன்று; பிறருக்காகத் துடிக்காத உள்ளம் முழுமையான மனித உள்ளமன்று. இதுவே திருவள்ளுவர் ஒப்புரவறிதல் அதிகாரத்தின் வழியாக உலகிற்குத் தருகின்ற நிலையான வாழ்வியல் அறமாகும்.

Bottom of Form

துணைநூற்பட்டியல்

References

திருக்குறள், பரிமேலழகர் உரை

திருக்குறள், மு. வரதராசனார் உரை

திருக்குறள், சாலமன் பாப்பையா உரை

உ.வே. சாமிநாதையர் (உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதிப்பு : திசம்பர் 1985.